பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
21 12 2025 SUNDAY 6 45 AM

# வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு அரசு பணியாளர் தேர்வாணையம் முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

- உடல் பருமன் குறைபாட்டை களைவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

- வரைவு வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதை வாக்காளர்கள் சரிபார்த்துக் கொள்ளுமாறு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

- செவிலியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

- 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு அரசு பணியாளர் தேர்வாணையம் முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்கள் பங்கேற்ற தேசிய மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

நாட்டின் நிர்வாக அமைப்புகளின் செயல்பாடுகளை வடிவமைப்பதில், இந்த ஆணையத்தின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப, அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு சிறந்த நிர்வாக நடைமுறைகளை குடிமைப் பணி அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

உடல் பருமன் குறைபாட்டை களைவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கை தொடங்கி வைத்து உரையாற்றிய அவர், உடல் எடையை குறைப்பதற்கு மருந்துகள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உடல் பருமன் தொடர்பான பாதிப்புகள் காரணமாக, இந்தியாவில் ஏற்படும் உயிரிழப்புகள் 63 சதவீதமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக பரப்பப்பட்டு வரும் தவறான மற்றும் அறிவியல் ஆதாரமற்ற செய்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்று அவர் வலியுறுத்தினார்.

உணவு பழக்க வழக்கம் மற்றும் அன்றாட வாழ்வியல் நடைமுறைகளில் சிறு மாற்றங்களை தொடர்ந்து கடைபிடிப்பதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தலைமையில் ஜவுளி ஆராய்ச்சி சங்கத்தின் ஒத்துழைப்பு குழுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜவுளித்துறையை வலுப்படுத்தும் வகையிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது குறித்து விவாதிக்கப்பட்டது.

ஜவுளித் துறை எதிர்கொண்டு வரும் பல்வேறு சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் ஆராய்ச்சிப் பணிகள் அமைய வேண்டும் என்று இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கம், பிரதமரின் மித்ரா பூங்கா உள்ளிட்ட ஜவுளி ஏற்றுமதி சார்ந்த பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதில் தங்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா என்பது குறித்து வாக்காளர்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

*நெல்லையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்டுள்ள வாக்காளர்களின் பெயர்களை சேர்க்க கட்சி நிர்வாகிகள் வீடு தேடித் சென்று உதவி செய்வார்கள் என்று தெரிவித்துள்ளார்.*

*(வாய்ஸ் பைட் - 25 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*செவிலியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.*

*சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், செவிலியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் மீதான அரசின் அடக்குமுறை கண்டனத்திற்குரியது என்று தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - எல். முருகன் 34 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*தமிழக மக்களின் மேம்பாட்டிற்காக 14 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.*

*சேலம் மாவட்டம், ஆத்தூரில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் மூலம் போலி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதால், சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.*

*பால் கொள்முதல் விலையை சிறிதளவு உயர்த்தி விட்டு, விவசாயிகளின் கோரிக்கையை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.*

*>>>>><<<<<*

*தென்காசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான பரப்பளவில் மல்லிகை, முல்லை, கனகாம்பரம், சம்பங்கி, ரோஜா, அரளி உள்ளிட்ட பல்வேறு வகையிலான பூக்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.*

அப்பகுதிகளில் நிலவி வரும் தொடர் பனிப்பொழிவு காரணமாக பூக்களின் விலை அதிகரிக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் - 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

<u>இருவரிச் செய்திகள்</u>

ரஷ்யா - யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில், அமெரிக்க அதிகாரிகள் ரஷ்ய தூதரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

>>>>><<<<<

வெனிசுலாவின் மீதான அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகள் மனிதகுலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று பிரேஸில் அதிபர் திரு. Lula Da Silva தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நேபாள நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், 10 இடதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைந்து நேபாள கம்யூனிஸ்ட் கட்சி என்று புதிய கட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் கடும் பனிப்பொழிவு காரணமாக, 138 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

>>>>><<<<<

மஹாராஷ்ட்ராவில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி இன்று காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன், சிறப்புப் பார்வையாளர் திரு. ராமன் குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

>>>>><<<<<

தருமபுரியில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் 850 பேருக்கு பணிநியமன ஆணைகளை மாவட்ட ஆட்சியர் திரு. ஆர். சதிஷ் வழங்கினார்.

>>>>><<<<<

*கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள ஏரியில் ஐந்து காட்டு யானைகள் நடமாட்டம் இருப்பதால், சென்னத்தூர், கசவகட்டா உள்ளிட்டப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.*

*>>>>><<<<<*

*கன்னியாகுமரி கடலில் வீசிய சூறைக்காற்று காரணமாக படகு கவிழ்த்து ஏற்பட்ட விபத்தில், கடலில் சிக்கித் தவித்த மூன்று மீனவர்களை கடலோரக் காவல் படையினர் மீட்டனர்.*

*>>>>><<<<<*

*திருவாரூர் மன்னார்குடி ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் பகல் பத்து உற்சவம் நேற்று தொடங்கியது.*

*>>>>><<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*துபாயில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி காலை மணி 10.30 - க்குத் தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான ஜெர்மனி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Mithes Rameshwaran பட்டம் வென்றார்.*

*நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில் அவர், 21-17, 17-21, 21-13 என்ற செட் கணக்கில் போர்ச்சுகலின் Tiago Berenguer-ஐ வென்று கோப்பையைக் கைப்பற்றினார்.*

*>>>>><<<<<*

*இந்தியா - இலங்கை இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.*

*விசாகப்பட்டினத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.*

*ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில், முதல் 2 போட்டிகள் விசாகப்பட்டினத்திலும், அடுத்த 3 போட்டிகள் திருவனந்தபுரத்திலும் நடைபெறும்.*

*>>>>><<<<<*

*சீனாவின் Hong Zhou நகரில் நடைபெற்ற உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்றுப் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை வெண்கலப்பதக்கம் வென்றது.*

*>>>>><<<<<*